<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>

<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>

O.S.No.72/2015 நாள்– 20.02.2026.

சாட்சி திரு. S.ஹரிஹரன் , நகர சார் ஆய்வாளர், இராஜபாளையம் நகராட்சி அவர்களுக்கு சாட்சிய சம்மன் சார்பு ஆகாமால் வாதி தரப்பில் வட்டாட்சியர் இராஜபாளையம் என்பவருக்கு சாட்சி சம்மன் எடுக்கப்பட்டு மேற்படி சாட்சிய சம்மனை வட்டாட்சியர் அவர்களால் பெறப்பட்டு சாட்சிய சம்மனில் சொன்ன ஆவணமானது வருவாய் வட்டாட்சியர்அலுவலகம் இராஜபாளையத்தில் இல்லை என்றும் மேற்படி நிலங்கள் இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதால் அதனை பொறுத்து சாட்சியம் அளிக்கும் படி சொல்லப்பட்டிருந்து அதன் பேரில் சாட்சியானவர் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவரை வா.சா. 3 ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் திரு.P.ஹரிகிருஷ்ணன், என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | S.ஹரிஹரன் | தாலுகா | இராஜபாளையம் |
| த–பெ | சண்முகசுந்தரம் | தொழில் | நகர சார் ஆய்வாளர், இராஜபாளையம் நகராட்சி |
| கிராமம் | இராஜபாளையம் | வயது | 31 |

<u>முதல் விசாரணை</u>

சாட்சிய சம்மனில் நகர புல எண்.110 க்கு அன்னபூரனி , உமாதேவி, பாண்டியராஜ், ராம்குமார் ஆகியோர் பட்டா பெயர் மாற்றுவது சம்மந்தமாக தாக்கல் செய்த ஆவணங்கள், பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் ஆகியோர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு மற்றும் உட்பிரிவு செய்யப்பட்டதற்கான உத்தரவின் நகலை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கும் படி சொல்லப்பட்டிருந்தது. மேற்படி நகர புல எண்.110 க்கு அன்னபூரனி , உமாதேவி, பாண்டியராஜ், ராம்குமார் ஆகியோர் பட்டா பெயர் மாற்றுவது சம்மந்தமாக அவர்கள் கொடுத்திருந்த மனுவின் அசலை நான் கொண்டுவந்திருந்தேன். அன்னபூரணி என்பவர் பெயரில் 18.09.2013 ம் தேதியில் மனு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த மனுவுடன் சேர்ந்து அவர் அ.வ.எண்.13/1999 சார்பு நீதிமன்றம், சிவகாசி வழக்கில் பிறந்த இறுதி நிலை தீர்ப்பாணையின் நகலை தாக்கல் செய்திருந்தார். அதோடு சேர்ந்த நீதிமன்ற ஆணையர் /வழக்கறிஞரின் வரைபட நகலையும் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவின் பேரில் 11.12.2013 ல் வட்டாட்சியர் உத்தரவின் பேரில் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. நகர புல எண்.110 ஆனது தற்போது வார்டு H , பிளாக் 18, 110/1, 110/2, 110/3 ஆகிய மூன்று உட்பிரிவுகளாக உள்ளது. இந்த உத்தரவு படி புல எண்.110/1 ஆனது 98 ச.மீ பரப்பளவில் எத்திராஜுநாயுடு மகன் வெங்கடசாமி, வெங்கடசாமி மனைவி சீதாலட்சுமி பெயரிலும், 110/2 ஆனது 98 ச.மீ பரப்பளவில் பாண்டிமுனி என்ற பாண்டியன் மனைவி அன்னபூரணி, அன்னபூரணி மக்கள் உமாதேவி, பாண்டியராஜ், ராம்குமார் ஆகியோர் பெயரிலும், 110/3 ஆனது 95 ச.மீ பரப்பளவில் சிவலிங்க முனி மனைவி முத்துலட்சுமி, மக்கள் நித்யா, நிர்மலா ஆகியோர்கள் பெயரில் தாக்கலாகியுள்ளது. சர்வே எண். 110 ஆனதை உட்பிரிவு

செய்வதற்கு முத்துலட்சுமியும் 18.09.2013 ல் மனு செய்துள்ளார். அதில் இணைப்பு ஆவணங்களாக அ.வ.எண்.13/1999 சார்பு நீதிமன்றம், சிவகாசி வழக்கில் பிறந்த இறுதி நிலை தீர்ப்பாணையின் நகலை தாக்கல் செய்திருந்தார். அதோடு சேர்ந்த நீதிமன்ற ஆணையர் /வழக்கறிஞரின் வரைபட நகலையும் தாக்கல் செய்திருந்தார். மேற்படி அசல் வழக்கில் பிறந்த இறுதிநிலை தீர்ப்பாணையில் அன்னபூரணி வகையறாவுக்கும், முத்துலட்சுமி வகையறாவுக்கும் அந்தந்த சொத்துக்களில் என்ன பங்கு பாகம் உள்ளது என்று சொல்லியுள்ளது. பொதுவாக சொத்தின் சுவாதீனம் அனுபவம் மற்றும் அதை பொறுத்து நீதிமன்ற உத்தரவு இருந்தால் தான் வருவாய் துறையானது பட்டா பெயர் மாற்றும் செய்யும். நீதிமன்ற உத்தரவில் மனுதாரர் அனுபவத்தில் இருப்பதால் சொல்லியிருந்தால் மட்டுமே வருவாய் துறையினரால் பட்டா பெயர் மாற்றம் செய்யப்படும். கிராம நிர்வாக அலுவலர்க்கும் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கும் தொடர்பு இல்லை என்பதால் கிராம நிர்வாக அலுவலக கோப்புகளை கொண்டுவரவில்லை. மேற்படி பட்டா உட்பிரிவு செய்யபடுவதற்கு முன்பாக சர்வேயர் புலத்தை பார்ப்பதற்கு உட்பிரிவை தயார் செய்வார், அந்த உட்பிரிவு கோப்பு , வரைபடத்தில் பரப்பளவை கனிப்பதற்கு முதுநிலை வரைவாளர் பார்வையிட்ட பின்பு தலைமை நில அளவர் அவர் மூலமாக கூறாய்வு செய்யப்பட்டு வருவாய் வட்டாட்சியர் உத்தரவுக்காக கோப்பு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்பு தான் வட்டாட்சியர் உத்தரவு பிறப்பிப்பார். சர்வே எண்.110 சம்மந்தமாக சர்வேயர் அறிக்கையை நான் கொண்டு வந்துள்ளேன். அதில் அன்னபூரணி, முத்துலட்சுமி ஆகியோர் இராஜபாளையம் நகரம் வார்டு H, பிளாக் 18, TS .NO.110 நீதிமன்ற தீர்ப்பு படி பாத்தியப்பட்டதை உட்பிரிவு செய்து தனி பட்டா கோரி மனு தாக்கல் செய்துள்ளனர். அந்த மனுவில் எந்த தேதியில் புலம் அளவை செய்யப்பட்டது என்று சொல்லப்படவில்லை. தலைமை நில அளவர் புலத்தை பார்வையிடுவதில்லை. சர்வேயர் அறிக்கை படி கோப்பு தயார் செய்யப்பட்டு உத்தரவுக்காக வட்டாட்சியருக்கு அனுப்பி வைப்பார். TS .NO.110/1 ஆனது 98 ச.மீ பரப்பளவு , எத்திராஜுநாயுடு மகன் வெங்கிடசாமி, வெங்கிடசாமி மனைவி சீதாலட்சுமி பெயரில் தாக்கலாகியுள்ளது. 110/2 ஆனது 98 ச.மீ ஆறுமுகம் ஆசாரி மகன் மாரியப்பன் பெயரிலும், 110/3 ஆனது 95 ச.மீ பரப்பளவு நடராஜன் மகன் ராமசுப்பிரமணியன் பெயரிலும் தற்சமயம் கணினி பதிவேட்டில் பதிவாகியுள்ளது. ராமசுப்பிரமணியன் , மாரியப்பன் ஆகியோர்கள் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு 19.02.2014 ல் மனு செய்துள்ளார்கள். கிரைய ஆவணம் எண்.5023/2013 ஆவணப்படி பட்டா மாறுதலுக்கு மனு செய்துள்ளார். ராமசுப்பிரமணியன், 31.07.2024 ம் தேதியில் பட்டா பெயர் மாறுதல் கோரி மனு செய்துள்ளார். கிரைய ஆவணம் எண்.3929/2024 ஆவணப்படி பட்டா மாறுதலுக்கு மனு செய்துள்ளார். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் எண்..3929/2024 ஆவணமானது நடராஜன் என்பவரிடமிருந்து ராமசுப்பிரமணியன் பெற்றுக்கொண்ட ஆவணமாகும். மேற்படி நடராஜன் பெயரில் பட்டாவனது துணை நகர அளவை பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இராஜபாளையம் வட்டாட்சியர் அவர்களால் எனக்கு சமூகம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட குறிப்பாணை அசல் **X1**. அன்னபூரணி மற்றும் முத்துலட்சுமி ஆகியோர்கள் பட்டா பெயர் மாற்றம் செய்ய கோரி கொடுக்கப்பட்ட மனு, நீதிமன்ற தீர்ப்பாணை, வட்டாட்சியர் உத்தரவு, சர்வேயர் அறிக்கை ஆகிய ஆவணங்களின் உண்மை நகல் **X2**. மாரியப்பன், நடராஜன் ஆகியோர்கள் பட்டா பெயர் மாற்றம் செய்ய கோரி கொடுக்கப்பட்ட மனு,

வட்டாட்சியர் உத்தரவு, சர்வேயர் அறிக்கை ஆகிய ஆவணங்களின் உண்மை நகல் **X3**. முத்துலட்சுமி பெயரில் இருந்து ராமசுப்பிரமணியன் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய கோரி கொடுக்கப்பட்ட மனு மற்றும் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் உண்மை நகல் **X4**. தற்போது நடைமுறையில் உள்ள நகர நில அளவை பதிவேட்டு உண்மை நகல் **X5**.

**<u>குறுக்குவிசாரணை 4 முதல் 7 எதிர்வாதிகள் தரப்பில்</u>**

நான் இரண்டு பட்டா பெயர் மாற்ற உத்தரவுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதில் முதல் உத்தரவானது நீதிமன்ற இறுதிநிலை தீர்ப்பாணை அடிப்படையிலானது. இந்த உட்பிரிவுகளை மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்டிருந்த நீதிமன்ற ஆணையர் / வழக்கறிஞரின் வரைபடம் படி தான் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மொத்த பரப்பளவில் இரண்டு உட்பிரிவுகள் ஒரே பரப்பளவிலும் ஒரு உட்பிரிவானது 3 ச.மீ குறைவாகவும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புல எண்.110/1, 110/2 ஆனது 98 ச.மீ சம பரப்பளவில் உள்ளதாகும். இரண்டாவது முறையாக அன்னபூரணி என்பவர் பெயரில்இருந்து கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் பட்டா பெயர் மாற்றம் மாரியப்பன் பெயரில் புல எண்.110/2க்கு ஏற்பட்டது. புல எண்.110/3 ஆனது முத்துலட்சுமி பெயரில் இருந்து கிரைய ஆவணத்தின் அடிப்படையில் நடராஜன் பெயருக்கு பெயர மாற்றம் செய்யப்பட்டது. மேற்படி நடராஜன் பெயரில் இருந்து செட்டில்மெ்ண்ட் ஆவணப்படி ராமசுப்பிரமணியன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. நான் தாக்கல் செய்துள்ள X2 முதல் X5 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படியாகவும் நீதிமன்ற உத்தரவு படியும் கிரைய ஆவணப்படியும், செட்டில்மெண்ட் ஆவணப்படியிலும் ஏற்பட்டதாகவும் இவை சட்டம் மீறல் இல்லை என்றால் சரிதான். ஆஜர் பட்டாதாரர் பெயரில் இருந்து 3ம் நபர் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யும் போது எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்பதால் யாருக்கும் அறிவிப்பு அனுப்பவேண்டியதில்லை என்றால் சரிதான். 2013ம் ஆண்டு பட்டா பெயர் மாற்றம் செய்த காலத்தில் இந்த வழக்குரை சொத்தானது வீட்டடி காலிமனையாக தான் காட்டப்படுள்ளது. கிராம நிர்வாக அலுவலரும், நில அளவையரும் புலத்தை பார்வையிடும்போது அனுபவம் பற்றி விசாரிக்கும் போது யாருக்கும் ஆட்சேபனையில்லை என்றால் மனு கொடுத்தவர் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை 12ம் எதிர்வாதி தரப்பில்</u>**

குறுக்கு விசாரணை 4 முதல் 7 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதை 12ம் எதிர்வாதி தமதாக ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை 8 முதல் 10 எதிர்வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் அவர்கள் தனக்கு தகவல் இல்லை என்று வக்காலத்தில் மேற்குறிப்பு செய்யப்பட்டும் 8 முதல் 10 எதிர்வாதிகள் அழைத்தும் ஆஜரில்லை. குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 20th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.